# சிவரமணி கவிதைகள்



# சிவரமணி கவிதைகள்

வாழ்வுக்காக போராடும்

பெண்களுக்கு. .....

✍ ✍ **சிவரமணி கவிதைகள்**

— சிவரமணி —

வைகாசி 1994

வெளியீடு :- விழிப்பு பெண்கள் அமைப்பு
39 — 433 , சில்வர்ஸ்டோன் டிரைவ்
ரொறொன்ரோ ஒன்டாரியோ
கனடா
M9r 3K7

அட்டைப்பட ஓவியம் :- **அருந்ததி சபாநாதன்**

✍ ✍ **Sivaramani Kavidaigal**

Sivaramani

May 1994

Published by : Vizhippu
39- 433 , Silverstone Drive
Toronto, Ontario
Canada
M9r 3K7

## — அறிமுகம் —

**விழிப்பு:-** எமது சமூகத்தில் நிலவும் பெண்கள் நலனுக்கு பங்கம் விளைவிக்கும் நடைமுறைகளையும், கருத்துக்களையும் மீளாய்வு செய்யவும், சமூக விழிப்புணர்ச்சியை தூண்டவும் விழிப்பு இயங்கிவருகிறது பெண்களின் நலத்தை பேணுவதன் மூலமுமே சமூகநலத்தை பேணமுடியும் என்ற அடிப்படையில் விழிப்பு செயற்படுகிறது. தமிழ்ப் பெண்களுக்கு கைகொடுத்து உதவவும், துணை நிற்கவும் விழிப்பு முன்நிற்கும்

## — பதிப்புரை —

**விழிப்பு** பெண்கள் அமைப்பால் சிவரமணியின் கவிதை தொகுப்பை வெளியிடுவதையிட்டு நாங்கள் சிறப்படைகின்றோம். கவிஞரும், பெண்ணிலைவாதியுமான சிவரமணி 1983 க்குப் பின் எழுந்த தேசிய விடுதலையின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் தனது கவிதை மூலம் வெளிக்கொண்டு வந்தவர்.

கனடாவில் வாழும் நாமும், இங்கு எம்மைப்போல் வாழ்கின்ற மற்றைய பெண்களும் சிவரமணியின் கவிதைகளை அறிந்து கொள்வதற்கும், போர்க்கால சூழ்நிலையில் பெண்களும், சிறுவர்களும், ஆண்களும் எவ்வாறு எப்படியான சூழ்நிலையில் வாழ்ந்தார்கள் என்பதை கவிதை மூலம் உணர்ந்து கொள்வதற்கும் இக்கவிதைகள் உதவும் என்று எண்ணுகிறோம். சிவரமணியின் வெளிப்படையான அரசியல், விமர்சனதன்மையும், சிந்தனைத் தெளிவும் மற்றைய கவிஞர்களில்லிருந்து மாறுபட்டது. இதனால் இவர் பல நெருக்கடிகளையும் சந்தித்தார். முற்போக்கான எண்ணங்களையும் போக்குகளையும் கொண்ட பெண்கள் யாழ்ப்பாண சமூகத்தால் ஒழுக்கரீதியில் புறக்கணிக்கும் போக்கிற்கும் முகம்கொடுத்தார்.

அத்துடன் சிவரமணியின் கவிதா ஆற்றலையும், நடைமுறை வாழ்க்கையில் பெண் என்ற அடிப்படையில் அவரின் போராட்டத்தையும் வெளிக்கொணர்தல் எமது கடமை என்பதையும் உணர்ந்தோம்.

சிவரமணி தன்னை போராட்டத்துடன் இணைத்துக் கொண்ட ஆரம்பகாலங்களில் எழுதிய கவிதைகள் அடக்கப்படுபவர்கள போராடுவதற்கு தூண்டுதலாக அமைந்தன. இவரால் இறுதிக்காலங்களில் எழுதப்பட்ட கவிதைகள் போராட்டத்தில் ஏற்பட்ட இயலாமையையும், விரக்தியையும் பிரதிபலித்தன.

சிவரமணியின் வாழ்வு உடல்ரீதியாக நிறுத்தப்பட்டது எவ்வகையாயினும், அவருடைய உணர்வுகளும், சிந்தனைகளும கவிதை வடிவில் எப்பொழுதும் வாழ்ந்துகொண்டிருக்கும்.

இவரின் கவிதைகள் எம்முடனும் குறிப்பிட்ட மட்டத்தினருடனும நின்றுவிடாமல் சமூகத்தின் எல்லாத் தளங்களிலும், சமையல் அறைகளுக்குள் அடைபட்டு கிடக்கும் பெண்களையும் சென்றடைய வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அதற்கு உங்கள் ஒவ்வொருவரினதும் உதவியும் தேவை.

இக்கவிதைத் தொகுப்பை வெளிக்கொணர உதவியாக இருந்த சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் மற்றும் பெண்கள் ஆய்வு வட்டத்திற்கும் "விழிப்பு" தனது நன்றியை தெரிவித்து கொள்கிறது.

**விழிப்பு பெண்கள் அமைப்பு**

கனடா.

# சிவரமணியின் வாழ்வும் கவிதையும்

— ஒரு அறிமுகம் —

" *எனது கைக்கெட்டியவரை*
*எனது அடையாளங்கள் யாவற்றையும்*
*அழித்து விட்டேன்* "

எனத்தனது இறுதி நேரக்குறிப்பில் எழுதிவிட்டு சிவரமணி தனது இருபத்தி மூன்றாவது வயதில் 1991ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி யாழ்ப்பாணத்தில் தனது வீட்டில் தற்கொலை செய்துகொண்டார். அவர் தனது தற்கொலைக்கு முன்னர் எரித்தவற்றுள் எத்தனை கவிதைகள அடங்கின என்பது தெரியவில்லை. ஆனால் அதிர்ஸ்டவசமாக அவரது சிலகவிதைகள் எம்மிடம் எஞ்சியிருந்தன.

---

சுவடுகள் சஞ்சிகையில் சிவரமணி—23 வயதில் தற்கொலை செய்துகொண்ட ஒரு இளம்பெண்ணின் வாழ்க்கை. கவிதை பற்றிய சிறு குறிப்பு என்ற தலைப்பில் வெளியான எனது கட்டுரையின் சிறிது மாற்றப்பட்ட வடிவமே இந்த அறிமுகம்.

1986 இல் 'பெண்கள் ஆய்வுவட்டம்' வெளியிட்ட 'சொல்லாத சேதிகள்' என்ற கவிதைத் தொகுதிக்கான தயாரிப்பில் ஈடுபட்டிருந்தபோது சிவரமணி (அப்போது அவருக்கு 17 வயது) தனது கவிதைகள சிலவற்றை தந்தார். ஒரு அப்பியாசப்புத்தகத்தில் அவை எழுதப்பட்டிருந்தன. சொல்லாத சேதிகளில் பிரசுரமான மூன்று கவிதைகளும் அதிலிருந்தே பெறப்பட்டவை. பின்னர் அந்த அப்பியாசப்புத்தகம் என்னிடமே இருந்தது.

பின்னர் 1989இல் சொல்லாத சேதிகளை போன்ற இன்னோர் தொகுதியை வெளியிட பெண்கள் ஆய்வு வட்டம் தீர்மானித்தது. அப்போதும் சில கவிதைகளை அவர் தந்திருந்தார். இவை தவிர யாழ் பல்கலைக் கழக மாணவர் ஏடான 'ஓசை' யில் வெளிவந்த கவிதையொன்றும் கிடைத்தது. இவை யாவும் சேர்ந்து தற்போது இருபத்தி இரண்டு கவிதைகள் உள்ளன. இவை 1985 இலிருந்து 1990 முற்பகுதிவரை அவர் எழுதியனவாகும். அதன்பின்னர் அவரது இறப்புவரை எழுதியவை எதுவும் இன்னும் கிடைக்கவில்லை. அவரது தற்கொலைக்கு முன்னர் எரித்தனவற்றுள் அவையாவும் அடங்கியனவா என்பதும் தெரியவில்லை.

இன்று எஞ்சியிருக்கும் இந்த 22 கவிதைகளில் பத்துக்கவிதைகள் மாத்திரமே இதுவரை பிரசுரமாகியவை. முனைப்பு, விடுதலை, வாருங்கள் தோழியரே வையகத்தை வென்றெடுக்க ஆகிய மூன்றும் சொல்லாத சேதிகள் தொகுதியில் பிரசுரமாகின. யாழ் பல்கலை கழக மாணவர் ஒன்றிய ஏடான ஓசையில் (செப்டெம்பர் 1989) வெளிவந்த கவிதை தவிர ஏனைய ஆறும் 1989, 90, 91ம் ஆண்டுகளில் திசை, சரிநிகர் பத்திரிகைகளில் வெளியானவை. இக்கவிதைகளே பின்னர் பல்வேறு இடங்களில் மறுபிரசுரம் செய்யப்பட்டவையாகும்

சிவரமணிக்கு அஞ்சலி தெரிவித்த குறிப்பொன்றுடன் அவரது பெயரில் 'இருட்டு அவசர அவசரமாக ஆடைகளைக் களைந்து நிர்வாணமாகிறது' என்ற தலைப்பில் ஒரு கவிதை பிரான்ஸ்சிலிருந்து வெளியாகும் ஓசை சஞ்சிகையில் (2—4) பிரசுரமாகியுள்ளது. ஓசை ஆசிரியர் குழுவினர் இக்கவிதையை எங்கிருந்து, எவ்வாறு பெற்றனர் என்பது பற்றி எதுவும் கூறவில்லை. உண்மையில் இக்கவிதை யாழ் பல்கலைகழக மாணவராயிருந்த எம். ஐ. ஜபாருடையது. 'காற்றோடு பேசுவோம்' என்ற தலைப்பில் கைலாசபதி கலையரங்கில் நிகழ்ந்த கவியரங்கொன்றில் படிக்கப்பட்டது. இக்கவியரங்கில் சிவரமணியும் கவிதை வாசித்தார். 'ஒரு யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்' என்ற தலைப்பிலான அவரது பிரபலமான கவிதையும்கூட அக்கவியரங்கில வாசிக்கப்பட்டது. ஏதோ தவறு காரணமாகவே ஜபாருடைய கவிதை சிவரமணியின் பெயரில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இத்தகைய தவறுகள் குறிப்பிட்ட எழுத்தாளர் தொடர்பாக மேலும் பல சிக்கல்களை ஏற்படுத்தலாம். உதாரணமாக திரு. சிவசேகரம், சுவடுகளில்(இல — 35) எழுதிய சிவரமணியின் கவிதைகள் விமர்சனத்தின் தற்கொலை என்ற கட்டுரையில் ஓசையில் பிரசுரமாகிய "இருட்டு அவசரம். . . ." என்ற கவிதையை மேற்கோள் காட்டியும் தனது கருத்தை வலியுறுத்த முனைந்தார்.

ஒரு எழுத்தாளர் மறைந்த பின் 'பாடங்கள்' (**Texts**) தொடர்பான பல சிக்கல்கள் தோன்றக்கூடும் என்பதையே எழுச்சியுள்ள சிவரமணியின் கவிதைகள் யாவற்றையும் ஒரு தொகுதியாக பிரசுரிக்க வேண்டும் என பெண்கள் ஆய்வு வட்டம் தீர்மானித்தமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

சிவரமணி யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியை பிறப்பிடமாகக் கொண்டவர். பெற்றோர் இருவருமே ஆசிரியர்கள். குடும்பத்தில் இரு பெண்பிள்ளைகள். சிவரமணி மூத்தவர். சிவரமணியின் தந்தையார் அரசியல், இலக்கிய ஈடுபாடு கொண்டவர்.

குறிப்பாக இடதுசாரி அரசியல் சார்பும் அது தொடர்பான முற்போக்கு இலக்கியங்கள்பால் ஆர்வமும் மிக்கவர். சிவரமணியின் அரசியல், கலை இலக்கிய ஈடுபாட்டுக்கு இதுவும் ஒரு உந்துதலாய் இருந்திருக்கவேண்டும்

எனினும் சிவரமணி மிக இளையவராயிருந்தபோதே எண்பதாம் ஆண்டுகளின் முற்பகுதியில் தந்தையார் இறந்துவிட்டார். சிவரமணி சுண்டிக்குழி மகளிர் கல்லூரியிலும் பின்னர் வேம்படி மகளிர் கல்லூரியிலும் கற்றவர். 1987ம் ஆண்டு யாழ் பல்கலைகழகத்தில் கலைப்பிரிவிற்கு அனுமதி பெற்ற அவர் அரசறிவியல், ஆங்கிலம், மொழியியல் ஆகிய பாடங்களை கற்றார். பொதுக் கலைமாணி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றமுன்னரே அவரது வாழ்வு முடிந்தது.

சிவரமணி இலக்கிய ஆக்கத்தில் மாத்திரமன்றி ஓவியம், இசை முதலியவற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். சில கோட்டு சித்திரங்களும், நீர்வர்ண ஓவியங்களும் வரைந்திருந்தார். ஆனால் தனக்கு மிக மிக நெருங்கியவர்கள் தவிர வேறு எவரிடமும் இவற்றை காண்பிக்கவில்லை. சிறு சிறு கலை கைப்பணி பொருட்கள் சேகரிப்பதில் அவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது.

சிவரமணி வாழ்ந்த, கவிதை ஆக்கிய காலப்பகுதி இலங்கையின் நவீன அரசியல், சமூக வரலாற்றில் மிக முக்கியமானதாகும். கடந்த சுமார் பத்து வருடங்களை உள்ளடக்கிய காலகட்டத்தில் இலங்கை வாழ் தமிழர் வாழ்வு பல்வேறு நெருக்கடிகளையும், முரண்பாடுகளையும், கருத்துக்களையும், அனுபவங்களையும் சந்தித்து தேசியவாத அரசியலின் முற்போக்கானதும், பிற்போக்கானதுமான கருத்தோட்டங்கள் கலந்து செயற்பட்ட இக்காலப்பகுதி தமிழர் வாழ்வுக்கும் அதன் பிரச்சனைகளுக்கும் அலாதியான ஒரு தன்மையை அளித்தன. இந்த பின்னணியில் பல்வேறு சமூக, கலாச்சார இயக்கங்கள் தோன்றின, செயற்பாடுகள் நிகழ்ந்தன.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பெண்களிடையே புதிய உற்சாகமும் விழிப்பும் ஏற்பட்டதை எண்பதாம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே அவதானிக்கலாம். இந்த உற்சாகம் வெவ்வேறு பெண்கள் அமைப்புக்களின் தோற்றத்திலும், அவர்களது அரசியல் ஈடுபாட்டிலும், கலை இலக்கிய நிகழ்ச்சிகளிலும் வெளிப்பட்டது.

இக்காலகட்டத்தில் தமிழ் தேசிய இயக்கத்தின்பால் மாணவர்களும், இளைஞர்களும் அதிக அளவாக ஈர்க்கப்பட தொடங்கிய போது கணிசமான பெண்களும் இதில் இடம்பெற்றனர். தேசிய குழுக்களது அங்கத்தவர்களாகவும் ஆதரவாளர்களாவும் இவர்கள் செயற்பட்டனர். தேசியவாதகுழுக்களும் தமது பெண்கள் அணிகளை அமைக்கத்தொடங்கினர். ஈழப்பெண்கள் விடுதலை முன்னணி, தமிழ்பெண்கள் விடுதலை கழகம், சுதந்திரப்பறவைகள் என இவை அமைந்தன ஆயுதப்பயிற்சி பெறுவதிலும்,இராணுவ நடவடிக்கைகளிலும் பங்குகொண்டனர்.

இவை தவிர அரசியல் குழுக்களை சாராத சுயாதீனமான சில பெண்கள் குழுக்களும் இக்காலத்தில் செயற்பட்டன. அன்னையர் முன்னணி(1984 — 87) யாழ் பல்கலைக்கழக பெண்கள் முற்போக்கு சங்கம் (1980 — 82), பெண்கள் ஆய்வு வட்டம், மாதர் மறுமலர்ச்சிப் பேரணி, தீவக மாதர் அணி, பூரணி பெண்கள் நிலையம், யாழ் பல்கலைக்கழகம் பெண்கள் சங்கம், ஆகியவை முக்கியமானவையாகும். (இவற்றில் பெண்கள் ஆய்வுவட்டம், பூரணி, யாழ் பல்கலைக்கழக பெண்கள் சங்கம், ஆகியவற்றில் சிவரமணி இணைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது)

பெண்கள் சஞ்சிகைகள் பல இக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தன. பெண் விடுதலை, தாகம், தோழி, விளக்கு, செந்தழல், சுதந்திரப்பறவைகள், நங்கை, மருதாணி (இது முஸ்லீம் பெண்கள் மத்தியிலிருந்து வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது)

ஆகிய இவற்றில் பெண்களது ஆக்கங்கள் கவிதையிலிருந்து கட்டுரைவரை இடம் பெற்றன. இவை தவிர 'சொல்லாத சேதிகள்' என்னும் பெண்களின் கவிதைத்தொகுதியொன்றும் வெளியானது. வாசிப்பதிலும் எழுதுவதிலும் ஒரு புத்தார்வமும், உற்சாகமும் வெளிப்பட்டது. கொழும்பிலிருந்து வெளிவந்த 'பெண்ணின்குரல்' சஞ்சிகையின் அதிக அளவான பிரதிகள் யாழ்ப்பாணப் பெண்களிடையே விற்பனையானது இதற்கு ஒரு உதாரணமாகும்.

தமிழ் சமூகத்தில் பெண்கள் நிலை, அவர்களது வெவ்வேறான பிரச்சனைகள், பெண்விடுதலை, பெண்ணிலை வாதம் ஆகியன குறித்து எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து பெண்களிடையேயும், இளைஞரிடையேயும் இடம்பெற்ற கருத்துப்பரிமாறல்கள், வாதப்பிரதிவாதங்கள் பெண்களது கலை இலக்கிய முயற்சிகளிலும் பிரதிபலித்தன. பெண்விடுதலை, பெண்ணிலைவாதம் தொடர்பான கருத்துப்பரிமாறல்களுக்கு தமிழ் தேசியவாதப் பின்னணி ஒரு ஏற்புடமையை அளித்திருந்தது.

இக்காலத்தில் புதிதாக பல இளம்பெண்கள் கலை இலக்கிய பரப்பில் காலடி வைத்தனர். ஊர்வசி, செல்வி, அவ்வை, மைத்திரேயி, மைதிலி அருளையா, சங்கரி, ராதா, ரங்கா, நளாயினி கணபதிப்பிள்ளை. ஊரெழு தர்ஷினி, வசந்தி, அம்மன்கிளி, மசூறா மஷீட் எனப் பலர் எழுதத்தொடங்கினர். இவர்களில் முக்கியமாக சிறந்த கவிஞர்களாக வளரக்கூடிய தீர்மானமான அடையாளங்களை வெளிக்காட்டியவர்கள சிவரமணியும், ஊர்வசியும் ஆவர்.

இலக்கியத்தில் மாத்திரமன்றி பெண்கள் அதிகம் கைவைக்காத, அல்லது ஈடுபாடு கொள்வர் என எதிர்பார்க்கப்படாத நவீன ஓவியத்துறையிலும் சிலர் பிரவேசித்தனர். 1986ஆம் ஆண்டு யாழ் பல்கலைகழக கலாச்சாரகுழு நடத்திய மூன்று இளம்பெண்களது ஓவியக்கண்காட்சி இதற்கு சான்றானது.

அருந்ததி சபாநாதனும், வாசுகியும் குறிப்பிடத்தக்க ஓவியர்களாக வளர்ந்ததும் இக்காலத்தில்தான். பெண்களது இந்த கலை இலக்கிய வெளிப்பாடுகள் சமகால தமிழ் கலை இலக்கிய பரப்புக்கு ஒரு புதிய பரிமாணத்தை சேர்த்தன. அதன் பொருட்பரப்பை விசாலித்தன. பெண்கள் தமது சமூக நிலமை, இருப்பு முதலியவை பற்றித்தமது கண்ணோட்டத்தில் கருத்துக்களையும், உணர்வுகளையும் வெளியிடும் நிலை ஒரு புதிய அம்சமாயிற்று. முன்பு பேசப்படாத பல விடையங்கள் இலக்கியத்தில் பேசப்பட தொடங்கின. பெண்களது பிரச்சனைகளை அவற்றிலும் குறிப்பாக சீதனம், கல்வியின்மை போன்றவை பற்றியே அதிகஅளவில் சீர்திருத்தப் போக்கில் பேசுவதே வழக்கமாயிருந்த தமிழ் இலக்கிய உலகில் இது ஒரு திடீர் திருப்பமாயிற்று.

ஆண் பெண் அசமத்துவ உறவின் வெவ்வேறு பரிமாணங்கள் பெண்களது வாழ்வில் இவற்றால் ஏற்படும் பாதிப்புகள் ஆகியவை பற்றிய பெண்ணிலை கருத்துக்கள் சிறிய அளவிலாயினும் இலக்கிய ஆக்கங்களில் இடம்பெற்றன. ஆணாதிக்கம், பெண் ஒடுக்குமுறை என்ற கருத்தாக்கங்கள் இலக்கிய வடிவம் பெறத்தொடங்கின. இவ்வகையில் சமூகப்பாரம்பரியத்தால் பெண்களுக்கென வரையறுக்கப்பட்ட பாத்திரங்கள் பற்றிய வினாக்களும் விமர்சனங்களும் பலாத்காரம், காதல், ஆண்பெண் உறவு போன்றவை பற்றிய பெண்ணிலைக் கருத்துக்களும் இலக்கிய வெளிப்பாடு பெற்றன. தமது அனுபவத்திரட்சியையும் உணர்வுகளையும், மன உருக்கத்தையும் பெண் எழுத்தாளர்கள் கவிதைகளிலும், சிறுகதைகளிலும் வெளிப்படுத்த ஆரம்பித்தனர். இப்புதிய போக்கினுடைய ஒரு தீர்மானமான வெளிப்பாடுதான் 1986 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிரசுரமாகிய 'சொல்லாதசேதிகள்' என்ற கவிதைத் தொகுதி ஆகும்.

பெண்களது ஆக்கங்கள் மாத்திரமல்லாது பொதுவாகவே இக்காலத்தில் நிகழ்ந்த கலை இலக்கிய நிகழ்ச்சிகள் பலவற்றின் மையப்பொருட்களில் பெண்கள் பிரச்சனையும் ஒன்றாக இருந்தது. குறிப்பாக இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பிரபலமான பல நாடகங்கள் பெண்கள் பற்றி பேசின. மண்சுமந்த மேனியார், தியாகத்திருமணம், சரிபாதி, மாதொருபாகன், தாயுமானார் நாயுமானார், சக்தி பிறக்குது, ஆகியவை இவற்றுள் முக்கியமானவையாகும். இத்தகையதோர் பின்னணியில்தான் சிவரமணியும் எழுத ஆரம்பித்திருந்தார்.

மேற்கூறியவை மாத்திரமல்ல சமூக அமைப்பு, கலாச்சாரம் பற்றிய வினாக்களும், தாக்கங்களும் இளைஞர் மத்தியில் இடம்பெற்றிருந்தன. பெண்களது விழிப்புணர்வு, விடுதலை கருத்துக்கள் ஆகியவை காரணமாக தவிர்க்கமுடியாதபடி வாழ்வின் சகல அம்சங்கள் பற்றியும் மறுபரிசீலனை, கருத்துப்பரிமாறல் என்பன சிறிய அளவிலாவது காணப்பட்டன. திருமணம், குடும்பம், ஆண் பெண்உறவு, காதல், கற்பு முதலியன பற்றி பல வினாக்கள் எழுந்தன. இவற்றுடன் இலக்கியம் கலையாக்கம், அரசியல், கட்சி, தலைமையும் தொண்டர்களும் போன்றவை பற்றிய கருத்துத் தேடல்களும் இடம் பெற்றன.

மொத்தத்தில் இக்காலத்தில் திறந்த மனத்துடன் தம்மை சுற்றி நிகழ்பவற்றை அவதானிக்கும் உணர்திறன்மிக்க இளைய தலைமுறையினாக்கு அவர்களது புத்தியை விசாலிக்கக்கூடிய, உலகப் பார்வையை ஆழமாக்கவல்ல பல்வேறு சந்தர்ப்பங்கள் இருந்தன. இக்காலத்தில்தான் சிவரமணி வளர்ந்து கொண்டிருந்தார். எழுதத் தொடங்கியிருந்தார். 1985ம் ஆண்டிலிருந்து பெண்கள் ஆய்வு வட்டத்தின் அங்கத்தவராக இணைந்த சிவரமணி பல கலந்துரையாடல்கள், கருத்தரங்குகளில் மிக ஆர்வத்துடன் பங்கு பற்றினார். கவிதா நிகழ்வு போன்ற கலை நிகழ்ச்சிகளிலும் ஈடுபட்டார்.

கலந்துரையாடல்களின் போது அவர் வெளிப்படுத்திய உற்சாகத்தையும், கூர்மையான உணர்திறனையும் தன்னை சுற்றியுள்ள விடயங்கள் பற்றிய காத்திரமான விமர்சனத்தையும் கண்டு வியப்புற்றிருக்கிறேன். மிக இளம் வயதிலேயே உலக நடப்புக்களை அறிந்து, புரிந்து கொள்ள விரும்புகின்ற ஆர்வத்தையும் அவரது பல்துறை வாசிப்பு நாட்டத்தையும் கண்டு மகிழ்ச்சியும், திருப்தியும் அடைந்திருக்கின்றேன்.

தமிழ் பெண்களிடையே வளர்கின்ற விழிப்புணர்வினதும், விடுதலை ஆர்வத்தினதும், தற்துணிவினதும் ஒரு தனியாள் அடையாளமாக அவர் தென்பட்டார் யாழ்பல்கலை கழகத்தில் *1988* ஆம் ஆண்டிலிருந்து செயற்படத் தொடங்கிய பல்கலைகழக பெண்கள் சங்கத்தின் நிகழ்ச்சிகளில் சிவரமணி தவறாது பங்கு கொண்டார். அவர் பங்கு பற்றுகின்ற கலந்துரையாடல்கள் சிந்திக்கத்தூண்டுவனவாக மாத்திரமன்றி சல சலப்பையும் ஏற்படுத்துவனவாயும் அமைந்தன. இச்சங்கத்தின் மாதாந்தகூட்டமொன்றில் 'வெகுஜனத்தொடர்பு சாதனங்கள் — கருத்துநிலை, பெண்கள், தொடர்பாக அவர் வாசித்த கட்டுரை முக்கியமானது.

யாழ்ப்பாணம் உடுவிலில் இயங்கும் பூரணி பெண்கள் நிலையத்தின் ஆதரவாளர்களில் ஒருவராகவும் சிவரமணி இயங்கினார். வாழ்கையாதாரங்களை இழந்த, வறிய கிராமத்து இளம் பெண்களை கொண்டு இயங்கிய அந்த நிலையத்து பெண்களிடையே கல்வி அறிவை வளர்க்க ஒழுங்கு செய்யப்பட்ட வகுப்புகள் சிலவற்றை அவர் நடத்தினார்.

யாழ்ப்பாணம் 'சாந்தியகம்' உள்வனத்துணை நிலையத்திலும் அவர் பயிற்சி பெற்றார். இந்தப்பயிற்சியின் மூலம் போர் நிலையால் உளரீதியாகப் பாதிப்படைந்த சிறுவர்கள், பெண்கள் மத்தியில் பணியாற்றுவதற்கு தன்னை தயார் படுத்தலாம் எனவும் அவர் கருதினார்.

சிவரமணிக்கு தென்னிலங்கையில் இயங்கிய சில பெண்கள் அமைப்புகள், மாணவர் அமைப்புகளுடனும் தொடர்பிருந்தது. இத்தகைய தொடர்புகளும் அவரது பார்வை விசாலிப்புக்கும் பரந்த நோக்கிற்கும் துணை செய்தன. பிலிப்பைன்ஸ், இந்தியா போன்ற நாடுகளில் கருத்தரங்குகளில் கலந்து கொண்டிருக்கிறார். அங்கெல்லாம் தமது தயக்கமற்ற, நேர்மையான உரையாடல்களால் பயனுள்ள பல சிந்தனைகளை ஏற்படுத்தியுள்ளார். இக்கருத்தரங்குகளில் அவருடன் கலந்து கொண்டோர் இதனை கூறியுள்ளனர்.

எனினும் இத்தகைய பொதுநல நாட்டமும், செயலூக்கமும், தற்துணிவும், சுதந்திர விகசிப்பும் கொண்ட இளம் பெண்களை எமது சமூகம் எவ்வாறு நோக்குகிறது? இத்தகைய பெண்களை பொறுத்துக்கொள்ளுமளவு அதன் கருத்துநிலை அமைந்துள்ளதா? எத்தகை தடைகளை அவர்கள் வழியில் அது ஏற்படுத்துகிறது. என்பவை முக்கியமான வினாக்களாகும். இது பற்றிய சமூக, கருத்துநிலை ஆராய்ச்சி விரிவாக்கத்திற்கு இது இடமன்று. ஆனால் சுருக்கமாக ஒன்று கூறலாம். சுதந்திர மனப்பாங்கும் செயலூக்கமும் கொண்டவர்கள் குறிப்பாக பெண்கள் தமது மூச்சு திணறுவது போல உணரும் ஒரு பாலைவனச்சூழலே இலங்கை தமிழ்ச்சமூகத்தின் பல தளங்களிலும் முதன்மையாக காணப்படுகின்றது. இடையிடையே தளிர் விட முயலும் புதிய சிந்தனைகள், முற்போக்கான ஆர்வங்கள், முயற்சிகள் பலத்த நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இது பொதுவான ஒரு விரக்திக்கும் செயலின்மைக்கும் வழிகோலக்கூடிய அபாயத்தை உள்ளடக்கியது. இது குறித்து சமூகத்தின் கல்விமான்கள், சமூக சீர்திருத்தவாதிகள், ஆசிரியர்கள், கலைஞர்கள், அரசியல்வாதிகள், யாவரும் அக்கறைப்படல் வேண்டும். பொதுவாக எண்பதுகளின் ஆரம்பத்தில் பெண்களின் ஆரம்பத்தில் பெண்களிடையே குமிழியிட்ட புத்தார்வமும் செயலூக்கமும் பிற்பகுதியில் குறைந்து போனமைக்கு சில அரசியல் காரணங்களும் இருந்தன.

குறிப்பாக 87ம் ஆண்டிற்கு முன்னர் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த போதிலும் பெண்கள் அமைப்புகள் உற்சாகமாக செயற்பட்டன. நான் முன்னர் குறிப்பிட்ட பெண்கள் சஞ்சிகைகள் 84, 85, 86 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தவையாகும். தேசிய விடுதலை என்ற கருத்தாக்கப் பின்னணியும் இவையாவற்றுக்கும் ஏற்புடமையையும். உற்சாகத்தையும் அளித்திருந்தது.

எண்பதுகளின் நடுப்பகுதியிலிருந்து தேசிய குழுக்களிடையே வளர்ந்து வந்த எதேச்சாதிகாரப் போக்கு வெளிப்படையாகவே தெரிந்த அதிகாரத்துக்கான போட்டி ஆகியவை ஜனநாயகத்தன்மைக்கு கெடுதிவிளைவித்ததுடன், குழுக்கள் எதனையும் சாராமல் பொதுவான தேசிய விடுதலை போராட்டத்திற்கு ஆதரவு அளித்தவர்கள் பலரையும் விரக்தியடைய செய்தன. அத்துடன் 87 பிற்பகுதியில் இந்திய அமைதிப்படையினருக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தம், அதனை தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடி நிலை சமூகத்தில் சுயாதீனமான அமைப்புகள் சுதந்திரமாக இயங்கத்தக்க சூழலை இல்லாமல் செய்தன. அத்துடன் 1990 யூன் மாதம் மீண்டும் ஏற்பட்ட போர் நிலமையும் தேசியவிடுதலை இயக்கங்கள் என்று கூறிக்கொள்ளும் சகல அமைப்புகளினதும் எதேச்சாதிகாரம், வன்முறைகள் ஆகியவை காரணமாகவும் முன்பு இயங்கிய பல சுயாதீன அமைப்புகள் செயலிழந்தன. அல்லது அவற்றின் செயற்பாடுகள் மிகவாகக்குறைந்தன. மாற்றுக்கருத்துகளுக்கு முகம் கொடுத்தல், விமர்சனத்திற்கு செவிசாய்தல் பொது வேலை திட்டங்களில் ஒன்றிணைதல் ஆகியவற்றுக்கு இடமில்லாது போயிற்று. இது சமூகத்தில் பின்னுக்கு தள்ளப் பட்டிருந்த சில பிற்போக்கான கருத்துக்களும், சக்திகளும் துணிவாக செயற்படக்கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்கியது. குறிப்பாக பெண்களிடையே ஊற்றெடுத்த உற்சாகம், செயலூக்கம் ஆகியவற்றுக்கு ஆரம்பத்தில் தேசியவிடுதலை என்ற கருத்துநிலை வழங்கியதிலிருந்த ஏற்புடமையின் காரணமாக அவற்றைத் துணிந்து எதிர்ப்பதற்கு தைரியமற்றிருந்த பழமைவாத சக்திகள் துணிவாக வெளிப்படதொடங்கின.

ஒரு உதாரணம் ஒன்றை மாத்திரம் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். யாழ்பாண பல்கலைகழகம் அதன் ஆரம்பத்திலிருந்தே பல முற்போக்கான அரசியல், சமூக, கலாச்சார செயற்பாடுகளின் தளமாக இயங்கி வந்துள்ளது. தமிழ்தேசிய வாதத்தின் முற்போக்கான ஓட்டங்கள் இக்கல்வி நிறுவனத்தில் சங்கமித்ததை எவரும் மறுக்கமுடியாது. அவ்வாறே பெண்களது பல முற்போக்கான செயற்பாடுகளுக்கும் இது ஆதரவளித்து வந்தது. இதனால் சமூகத்தில் முன்னுக்கு வந்த சமூகப்பழமைவாதம் பல்கலைகழகத்திலும் பிற்காலத்தில் தலைகாட்டியது.

1989ம் ஆண்டு பல்கலைகழகத்தில் பெண்களின் விழிப்புணர்வுக்கும், பெண்நிலை வாதத்திற்கும் எதிரான பிற்போக்கு சக்திகளின் குரல் வெளிப்படையாக ஒலித்தது. பல்கலைகழகத்திற்கு அனுமதி பெற்ற புதிய மாணவிகளின் ஆடையணிதல் முறைக்கு சிரேஷ்ட மாணவர்கள் (ஆண்கள்) விதிக்கும் சில கட்டுப்பாடுகளில் ஆரம்பித்து பெண்நிலைவாதத்திற்கும், பெண்நிலைவாதிகளுக்கும் எதிரான கோசங்களை தாங்கிய சுவரொட்டிகளாக இவை வெளிப்பட்டன. சிவரமணி இக்காலகட்டத்தில் யாழ்பல்கலைகழக மாணவி என்பதும் கேலிக்கும் தாக்குதலுக்கும் ஆளான பெண்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே வருடத்தில்தான் பல்கலைகழக மருத்துவபீட விரிவுரையாளரும் பெண்நிலைவாதியுமான ராஜனி திராணகம இலங்கையின் சகல அரசியல் தரப்பினரதும் மனித உரிமை மீறல்களை வெளிப்படையாக கண்டித்தமைக்காக யாழ்ப்பாணத்தில் "இனந்தெரியாத நபர்களால்" சுட்டு கொல்லப்பட்டார்.

இத்தகைய நெருக்கடியான காலகட்டத்திலும் யாழ்பல்கலைகழக பெண்கள் சங்கமும், 89 ஆரம்பத்தில் உருவான பூரணி பெண்கள் நிலையமும், பெண்கள் ஆய்வு வட்டமும் சுயாதீனமாக இயங்கிவந்தன சிவரமணி இவற்றுடன் சேர்ந்து செயற்பட்டார்.

இங்கு நான் மேலே விபரித்த சூழல்தான் குறிப்பாக பெண்களுக்கு ஒரே சமயத்தில் நம்பிக்கையையும், நம்பிக்கையின்மையையும் வெளிக்காட்டிய சூழலாகும். **"வாருங்கள் தோழியரே வையகத்தை வென்றெடுப்போம்"** என ஆரம்பத்தில் எழுத முடிந்த சிவரமணிக்கு 89ன் இறுதியில்

*"... நாங்கள் எழுந்தோம்*
*உலகை மாற்ற அல்ல*
*இன்னொரு இரவு நோக்கி "*

எனத் தன்னை சுற்றியுள்ள யதார்த்தத்தை உணர்ந்த சோர்வைதான் கவிதையில் வெளிக்காட்ட முடிந்தது.

சிவரமணி வாழ்ந்த விகசித்த, இறந்து போன இந்த காலகட்டம் இலங்கை தமிழர் வாழ்வில் மிக முக்கியமானது. சில வெற்றிகளதும் பல தோல்விகளதும் சாட்சியமாக உள்ளது.

சிவரமணியும் இத்தகைய நெருக்கடிகளுக்கு உக்கிரமாக ஆளானதை நான் அறிவேன். நியாயத்திற்காகவும் பெண்கள் உரிமைக்காகவும் அவர் கதைத்த போதும், செயற்பட்ட போதும் கேலி செய்யப்பட்ட, துன்புறுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் சில 1989 இல் நடைபெற்றன. ஆனால் சிவரமணி விட்டுக்கொடுக்கவோ சமரசம் செய்யவோ முயலவில்லை. திருமணம் செய்யுமாறு அவரை வற்புறுத்திய உறவினர்களுடன் அடிக்கடி அவர் முரண்பட நேரிட்டது.

நான் மேலேகூறியவாறு தன்னுணர்வும், சுதந்திர ஆர்வமும் உள்ள பெண்களுக்கு எமது சமூகத்தில் வாழ்க்கை ஒரு நிரந்தரமான போராட்டமே.

தனது கருத்துக்களினதும், ஆர்வங்களினதும் வாழ்வா? சாவா? என்ற போராட்டம். சிவரமணியும் போராடினார். தமது கருத்துக்களையும், ஆர்வங்களையும் உயிர்ப்புடன் வைத்துக்கொள்ள முனைந்தார். ஆனால் விட்டுக்கொடு! சமரசம் செய்! என வினாடிக்கு வினாடி எச்சரித்துக்கொண்டிருக்கும் சமூகத்துடன் தான் முற்றிலும் உயிர்ப்புடன் வாழமுடியாது என உணர்ந்தார் போலும்!

சிவரமணியின் ஆரம்பகாலக் கவிதைகளில் குமிழியிட்ட உற்சாகம், நம்பிக்கை என்பன பிற்கால கவிதைகளில் வடிந்து போனதை காணலாம். சொல்லாத சேதிகள் தொகுப்பில் வெளியான முனைப்பு, விடுதலை, வாருங்கள் தோழியரே வையகத்தை வென்றெடுக்க போன்ற கவிதைகள் அவரது ஆரம்பகால நம்பிக்கைகளுக்கு சான்று. இவை தவிர பிரசுரமாகாத வேறு சில ஆரம்பகால கவிதைகளும் இந்த நம்பிக்கையை பிரதிபலிக்கின்றன.

*"விலங்குகளும் சிறைகளும்*<br>
*உடைக்கப்படுகின்றன*<br>
*புது உலகம் எம்மை நோக்கிப்*<br>
*பரந்து விரிகின்றது*<br>
*அந்தப் புதிய உலகம்*<br>
*தன் கரங்களை நீட்டியுள்ளது*<br>
*குருதி சொரியும் மனிதரை நோக்கி*<br>
*அது வரவேற்பு கூறுகிறது."*

என அவரது ஒரு கவிதை முடிவுறுகிறது. இன்னொரு கவிதையிலிருந்து சில பகுதிகள் பின்வருமாறு

*".. உலகின் சிருஷ்டி கர்த்தாக்களே*<br>
*உலகை படைக்கும்*<br>
*உயர்ந்த மனிதர்களே*

*நீங்கள் உறங்க வேண்டாம்*
*இந்த உலகின்*
*சிறப்புக்கள் யாவும்*
*உங்களிற்கு உரியவை*
*எந்தச் சென்ற காலமும்*
*இதைவிடச் சிறந்ததல்ல*
*ஏனெனில்*
*எக்காலத்தின் சிறப்பும்*
*இக்காலத்துக்குரியது.*
*எங்கள் காலத்தில்*
*ஒரு புதிய உலகம்*
*படைக்கப் படட்டும்*
*அத்தியாயங்கள் வரலாறு ஆகட்டும்*
*எங்கள் உலகம் வளர்வதென்பது*
*எங்களின் வளர்ச்சியாய்*
*என்றென்றும் இருக்கட்டும்"*

ஆனால் சிவரமணி குறிப்பாக 1989ஆம் ஆண்டிலும், பின்னரும் எழுதியவற்றில் பொதுவான கசப்பும், கடுமையான சமூக அரசியல் விமர்சனமும் காணப்படுகிறது.

". . புத்திசாலித்தனமான
*கடைசி மனிதனும்*
*இறந்து கொண்டிருக்கின்றான். . "*

*" கேள்வி கேட்பதற்கான*
*எல்லா வாசலிலும் அறையப்பட்ட பின்னர்*
*இருட்டின் உறுதியாக்கலில்*
*உங்கள் குழந்தைகளை விட்டுச் செல்லுங்கள்*
*அவர்களுக்கு பின்னால் எதுவுமே இல்லை*
*சேலை கட்டி காப்பாற்றிய*
*சில நாகரீகங்களை தவிர. . . "*
*— 1989 —*

என ஒரு கவிதை ஆரம்பிக்கிறது.

"எனக்கு உண்மைகள் தெரியவில்லை
பொய்களை கண்டு பிடிப்பதும்
இந்த இருட்டில்
இலகுவான காரியமில்லை. . . . . .
தெருவில்
அவலமும் பதற்றமுமாய்
நாய்கள் குலைக்கும்போது
பூட்டப்பட்ட கதவுகளை
மீண்டும் ஒருமுறை சரிபார்த்துவிட்டு
எல்லோரும் தூங்கப்போகும் நேரத்தில்
நான்
நாளைக்கு தோன்றுகின்ற சூரியன் பற்றி
எண்ண முடியாது.
இரவு எனக்கு முக்கியமானது
நேற்றுப் போல்
மீண்டும் ஒரு நண்பன் தொலைந்து போகக்கூடிய
இந்த இருட்டு
எனக்கு மிகவும் பெறுமதியானது"

— 1989 —

இது இன்னொரு கவிதையின் பகுதி.

வேறொரு கவிதை பின்வருமாறு ஆரம்பிக்கிறது.

"என்னிடம்
ஒரு துண்டுப் பிரசுரத்தை போல
நம்பிக்கையும் முடிவும் சொல்லத்தக்க
வார்த்தைகள் இல்லை"

1989 ஆம் ஆண்டு இறுதியில் எழுதப்பட்ட 'யாழ்பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலை' என்ற இன்னோர் கவிதை கசப்பையும் நம்பிக்கையின்மையையும் அலாதியாக புலப்படுத்துவதாகும்.

"தனித்து
பிரயாணிகள் அற்று மறக்கப்பட்ட
ஒரு சிறிய ரயில் நிலையம் போல
ஒவ்வொருவருக்கிடையிலும்
சிரிப்புடன் கூடவே எழும்
மதிற் சுவர்களிடையே
ஒரு மாலை.............
எனது நண்பர்களுடன் நான்
கதைத்துக் கொண்டிருக்கிறேன்
எந்த விஷேசமுமற்ற
ஏராளமான காயங்களுக்கிடையில்
மகிழ்ச்சியாயிருக்க விரும்பும் பொழுதுகள். .
.............................
...............................
கதவின் வழியாக புகுந்த
மேற்கின் சூரியக் கதிர்கள் விரட்ட
நாங்கள் எழுந்தோம் —
உலகை மாற்ற அல்ல
மீண்டும் ஒரு இரவு நோக்கி."

'எனது பரம்பரையும் நானும்' என்ற தலைப்பிலான கவிதை இந்த நிகழ்காலத்தின் மீதான அவநம்பிக்கையை மிகத்திரண்ட வடிவில் தருகிறது.

கூனல் விழுந்த
எம் பொழுதுகளை
நிமிர்த்தத்தக்க
மகிழ்ச்சி எதுவும்
எவரிடமும் இல்லை
எல்லாவற்றையும்
சகஜமாக்கிக் கொள்ளும்
அசாதாரண முயற்சியில்
தூங்கிக்கொண்டும் இறந்து கொண்டும்
இருப்பவர்களிடையே
நான்
எனது நம்பிக்கைகளுடன்
தோற்றுக்கொண்டிருக்கிறேன்."

இந்தக் கவிதை வரிகள் சிவரமணியின் அவநம்பிக்கை புலப்படுத்துவது மாத்திரமல்ல சமீபகாலத்து அரசியல், சமூக ஓட்டங்களையும் சம்பவங்களையும் புரிந்து கொள்பவர்களுக்கு பல தட்டு அர்த்தங்களைப் படிக்கும் தோறும் அளிக்கக்கூடியவையாகும்.

சிவரமணியின் கவிதையாக்க முறை, நடை, மொழி கையாளுகை ஆகியன மிக வித்தியாசமானவை. புதியவை. அவரது உவமைகளும் படிமங்களும் சொல்கிற செய்தியும் உணர்த்துகிற அனுபவமும் ஆழமானவை

உங்களுடைய வரையறைகளின்
சாரளத்துக்குப் பின்னால்
நீங்கள் என்னை தள்ளமுடியாது.
இதுவரை காலமும்
நிரந்தரமாக்கப்பட்ட சகதிக்குள் கிடந்து
வெளியே எடுத்துவரப்பட்ட

ஒரு சிறிய கல்லைப் போன்று
நான்
என்னைக் கண்டெடுத்துள்ளேன்.

. . . . . . .

கண்களை பொத்திக்கொள்ளும்
உங்கள் விரல்களிடையே
தன்னை கீழிறக்கிக் கொள்ளும்
ஒரு குட்டி நட்சத்திரத்தை போன்று
எனது இருத்தல் உறுதிபெற்றது.

. . . . . . .

தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
நான்
பிரசன்னமாயுள்ளேன்.

கல், நட்சத்திரம், கேள்வி ஆகிய உவமைகளின் பயன்பாடு மிக வித்தியாசமானது. கவிதை மரபில் உவமைகளின் தன்மையையும், பயன்பாட்டையும் நோக்கும் போது அவற்றிலிருந்து வேறுபட்ட ஒரு பயன்பாட்டை இங்கு கவனிக்கலாம். தன்னைத்தானே உணர்தலின் ஆழம், பெருமிதம், உறுதி ஆகியவற்றை இந்த உவமைகளின் மூலம் புலப்படுத்த முனைகிறார்.

ஒரு சிறிய குருவியினுடையதைப் போன்ற
அவர்களின் அழகிய காலையின்
பாதைகளின் குறுக்காய்
வீசப்படும் ஒவ்வொரு குருதி தோய்ந்த
முகமற்ற மனித உடலும்
உயிர் நிறைந்த
அவர்களின் சிரிப்பின் மீதாய்
உடைந்து விழும் மதிற்சுவர்களும்
காரணமாய்
எங்களுடைய சிறுவர்கள்
சிறுவர்களாயில்லாது போயினர்.

இக் கவிதைப் பகுதியின் படிமங்கள் யதார்த்தத்தின் குரூரத்தை மிக அச்சொட்டாகவும் அழுத்தமாகவும் காட்டுகின்றன. இவ்வகையில் சிவரமணியின் மொழிக்கையாளுகை புதியது. பழைய முறையிலிருந்து விடுதலை பெற்றது.

தமிழில் பெண்களது எழுத்திலக்கியப் படைப்புகள் பற்றிப் பலர் அக்கறை கொள்வதில்லை. தப்பித்தவறி இவை பற்றிக் குறிப்புக் கூறுவோரும் பெண்கள் " கண்ணீர் இழுப்பிகளைப்'' படைப்பது பற்றியும், புத்தாக்கத் தன்மை இல்லாதிருப்பது பற்றியுமே பெரிதாகக கூறுவர். இது பெண்களது இயற்கையான பலவீனம் அல்ல. படிமங்களை புதிதாய் அமைக்கவும், வடிவங்களை புதிதாய் வளர்க்கவும் முடியாத (தயங்கும்) பலவீனம் பெண்களின் இயற்கையைச் சார்ந்தது அல்ல. இது பெண்களது நடவடிக்கைகளை வடிவமைப்பதில் பெரும்பங்கு கொள்ளும். கலாச்சார அமைப்பிலிருந்து உருவாவது பெண்களின் அனுபவங்களும், சிந்தனைகளும், அவற்றின் வெளிப்பாடுகளும் குறுக்கப்பட்டும் இறுக்கப்பட்டும் இருக்கும் போது அந்த மனத்தடையையும் அதனுடன் தொடர்பான மொழித்தடையையும் மீறுவது ஒரு அசாதாரண பலத்தை சார்ந்த விடையமாகும்.

இந்த இளம் வயதில் சிவரமணிக்கு இந்த அசாதாரண பலம் சித்தித்திருந்தது. ஆனால் இந்தப்பலம் அவருக்கே தாங்க முடியாததன் விளைவுதானோ இத்தற்கொலை எனவும் சிந்திக்கத்தோன்றுகிறது. மனித வாழ்க்கையை அற்புதமானதாகவும் தன்னை சுற்றிய யதார்த்தத்தை குரூரம் மிக்கதாகவும் ஒரே நேரத்தில் உணர்ந்த ஒரு இளம் பெண்ணின் இரண்டக உணர்வு அவரது இறுதி நேரக்குறிப்பில் மிகத்துல்லியமாகத் தென்படுகிறது.

*"எந்தவித பதட்டமுமின்றி*
*சிந்தித்து*
*நிதானமாக எடுத்த முடிவு இது.*
*எனினும்*
*எனக்கு இன்னும் வாழ்க்கை*
*அற்புதமாகவே உள்ளது.*
*எரியும் நெருப்பும் காற்றும்*
*இந்த முடிவுக்காக என்னை மன்னித்து விடுங்கள்.*
*மன்னிக்காவிட்டாலும் பரவாயில்லை*
*எனது கைக்கெட்டியவரை*
*எனது அடையாளங்கள் யாவற்றையும்*
*அழித்துவிட்டேன்*
*நீங்கள் செய்யக்கூடிய உதவி*
*ஏதும் எஞ்சியிருந்தால்*
*அவற்றையும் அழித்து விடுவதே*

**— 19. 05. 1991 —**

உலகின் முக்கியமான சில கவிஞர்கள் தற்கொலை செய்துள்ளனர். அதிலும் குறிப்பாக பெண் கவிஞர்கள். அமெரிக்க பெண் கவிஞர் சில்வியா பிளாத்தினுடைய தற்கொலை இலக்கிய உலகில் எழுப்பிய எதிரொலி இன்னும் ஓய்ந்து விடவில்லை. இத்தற்கொலைகள் வெறுமனே சம்பவங்கள் மாத்திரமல்ல தற்கொலை செய்வோரின் வாழ்க்கை பற்றியும், சமூகம் பற்றியும் அவை சில செய்திகளை கூறுகின்றன. சிவரமணியின் தற்கொலையும் இவ்வரிசையில் ஒன்று.

சிவரமணியின் ஆளுமையும், கவிதைகளும், அவரது தற்கொலையும் எழுப்புகிற வினாக்களும், உணர்த்துகிற செய்திகளும் எமது ஆழ்ந்த அக்கறைக்கு உரியவை. "தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்" இவை எம்முன் பிண்டப்பிரமாணமாய் உள்ளன

**சித்திரலேகா மௌனகுரு**

மட்டக்களப்பு

*20. 10. 1993*

1

*எனது ஊர் கோவிலில்*
*திருவிழா நடந்தது*
*ராகம் இல்லாத*
*நாதஸ்வர ஓலமும்*
*அண்டமும் அதிரும்*
*மேளத்துடனும்*
*எனது ஊர் கோவிலில்*
*திருவிழா நடந்தது*

வழக்கமான
ஆண்டுகள் போன்று
எனது ஊர்கோவிலில்
திருவிழா நடந்தது

கடுக்கன் போட்டு
காதுகள் கிழிந்த
கச்சான் ஆச்சியும்
தள்ளு வண்டியோடு
ஐஸ்பழக்காரனும்
சரிகை சேலையை
சரிபார்க்கும் பெண்களும்
பேசிப்புறுபுறுக்கும்
கிழவர் கூட்டமும்
வழக்கம் போல
என்னூர் கோவிலில்
திருவிழா நடந்தது
ஆனால்
முன்னே நின்றிருந்த
கம்பத்தில் மாத்திரம்
கைகளால் நழுவி விழும்
ஐஸ்பழத்துண்டைப் போல்
மக்கள் பார்வையில் நழுவி
ஒரு சிறு கறுப்பு கொடி
அன்றொரு நாள்

சிறிது காலத்தின் முன்
இரத்தத் துளிகள்
மண்ணிலே தெளிக்கப்பட்டது
மரண அரவணைப்பில்
உயிர்கள்
ஆறுதல் தேடியது
புதிரான வேளையில்

அந்த நாளில்
யாரோ ஒருவன்
இதை ஏனோ கட்டிவிட்டான்
எனினும்
என் ஊர்க் கோவிலில்
வழக்கம் போன்று
திருவிழா நடந்தது

மீண்டும் ஒரு நாள்
வரலாம்
இரத்தத் துளிகள்
மண்ணிலே தெளிக்கப்படலாம்
மீண்டும் ஒருவன் வருவான்
இந்தக் கொடி கிழிந்திருக்கும்
இதற்குப் பதில்
இன்னுமோர் கறுப்புக் கொடி
ஏற்றிவைப்பான்
எனினும்
என் ஊர்க் கோவிலில்
வழக்கம் போல்
திருவிழா நடைபெறும்

✍ 1985.

2.

எங்கள் கைகளை — ஒன்றாகப்
பிணைத்துக் கொள்வோம்
நேற்று நடந்து விட்ட
சோகங்களை மறக்கவல்ல
நாங்கள் செய்து விட்ட
குற்றங்களை மூட அல்ல
எனினும்
எங்கள் கைகளை — ஒன்றாகப்
பிணைத்துக் கொள்வோம்

நேற்றைய சோகங்கள்
நாளையும் வரட்டும்
துயர சங்கிலிகள்
எம்மைப் பிணைக்கட்டும்
நாங்களோ கரங்களைப்
பிணைத்துக் கொள்வோம்

நேற்று நடந்தவை
முடிந்தவையாகட்டும்
நடக்கப் போபவை
எம்மால் ஆகட்டும்
நாங்களோ கரங்களைப்
பிணைத்துக் கொள்வோம்

பொங்கி வரும் சோக
ஆற்றிற்கு அணைகட்ட
குருதியில் தோய்ந்த
கொடியின் கீழ் அணிநடக்க
எங்கள் கைகளை — ஒன்றாகப்
பிணைத்துக் கொள்வோம்
எங்கள் இலட்சியம்
அதற்காய் மற்றதற்காய்
எங்கள் கைகளை — ஒன்றாகப்
பிணைத்துக் கொள்வோம்

✍ 1985.

## 3.

என்னிடம்
ஒரேயொரு துப்பாக்கி
ஒரேயொரு கைக்குண்டு
என் எதிரிக் கெதிராய்
போரைப்
பிரகடனம் செய்ய
என்னிடம்
ஒரேயொரு துப்பாக்கி
ஒரேயொரு கைக்குண்டு
எனினும் நான்
தளரவில்லை

எனது
கறை படிந்த கரங்களின்
ஜாதகக் கோடுகள்
மறைந்து விட்டன
இங்கேயொரு
புதிய கோடு

வானிற்கும் மண்ணிற்கும்
நீளம் அளக்கவல்ல
உனக்கும் எனக்கும்
உயரம் காட்டவல்ல
இங்கு ஒரு
புதிய கோடு

எனது துப்பாக்கி
பறிக்கப் படலாம்
எனது கைக்குண்டு
வெடித்து சிதறலாம்
ஆனால்
அந்தக் கோடு
அழிக்கப்படாது

ஆசையும் கனவும்
நிறைந்த என் இதயம்
பிளக்கப் படலாம்
ஆனால் எங்கள்
கறை படிந்த
கரம் வரைந்த
அந்தக் கோடு
அழிக்கப்படாது
ஆனால்
எம் குழந்தைகளால்
கடக்கப்படலாம்

✍ **1985**

4

## எமது விடுதலை

நாங்கள் எதைப் பெறுவோம்
தோழர்களே
நாங்கள் எதைப் பெறுவோம்
இன்பமும் இளமையும்
இழந்து நின்றோம்
ஏக்கமும் ஏழ்மையும்
சுமந்து வந்தோம்
நாங்கள் எதைப் பெறுவோம்

விடுதலை என்றீர்
சுதந்திரம் என்றீர்
எம்மினம் என்றீர்
எம்மண் என்றீர்

தேசங்கள் பலதிலும்
விடுதலை வந்தது இன்று
சுதந்திரம் கிடைத்தது

எனினும்
தேசங்கள் பலதிலும் மனிதர்கள்
இன்னும்
பிச்சை பாத்திரங்களை
வேலைக்கு அமர்த்தியுள்ளனர்
நாமும் பெறுவோமா
தோழர்களே
பிச்சை பாத்திரத்தோடு
நாளை ஒரு விடுதலை

நாம் எல்லாம் இழந்தோம்
எனினும்
வேண்டவே வேண்டாம்
எங்களில் சிலரது விடுதலை
மட்டும் ;
விலங்கோடு கூடிய
விடுதலை மட்டும்
வேண்டவே வேண்டாம்!

தோழர்களே
விலங்குகளுக்கெல்லாம்
விலங்கொன்றை செய்த பின்
நாங்கள் பெறுவோம்
விடுதலை ஒன்றை

✍ **1986.**

## 5

மஞ்சள் சந்தனத்தில்
மூழ்கி வரும் வானமகளின்
வண்ண நெற்றியிலே
ஆதவன் பொட்டு இடும்
அந்தி வேளைகளிலே
உன்னை நினைக்கின்றேன்
எனது இதய ரோஜாவின்
ஒவ்வொரு செவ்விதழும்
காதல் காணிக்கையாய்
சமர்ப்பிக்கப் பட்ட பின்பு
எஞ்சியிருப்பது பூவைதாங்கிய
வெற்றுக் காம்புதான்

ஆயிரம் மைல்களுக்கப்பால்
நான் இருந்து வடிக்கின்ற
இந்தக் காதல் கடிதங்கள்
உன்னை அடையாமல் போகலாம்
ஆனால் காட்டு வாழ்கையின்
தேவதையாய் நீ இதயக்
கோவிலில் என்றுமே இருக்கின்றாய்

என் இதயத்தில் நான்
தாங்கியுள்ள வெற்றுக்காம்பு
இன்னும் எறியப்படவில்லை
அன்பே
புது பிரசவத்துக்காய்
இங்கே காத்துள்ளது

ஆனால்
அந்தப் பிரசவம்
அந்தக் காதல் மலர்
நானும் நீயும் காத்துள்ள
நாளைய உலகென்னும்
இளம் தேசத்தில்
நிச்சயம் மணம் வீசும்.

✍ 1985.

## 6

ஆயிரம் ஆயிரம் சலசலப்பு
அதை ஏனென்று கேட்க
இந்தப் பூமி ஏங்கும்
ஆனால் அந்தோ
இந்த சலசலப்புக்களின் மேல்
இந்த இரைச்சல்களின் இடை
இந்தப் பேரண்டத்தை
நடுங்க வைக்க
மேகங்கள் இருண்டுள்ளன
ஆனால் இங்கோ
ஆயிரம் இரைச்சல்கள்
இன்னம் ஓயவில்லை
ஆனால் இந்தப்
பேரண்டத்தை
நடுங்கவைக்க
இந்த இரைச்சல்களுக்க மேல்
ஒரு பேரிடி
முழங்குகின்றது

இந்த பேரண்டம்
புதிதாக
மறுபக்கமாய்
வளர்க்கப் படும்
உதய சூரியனின்
சிவந்த கதிர்கள்
நீண்டு நீண்டு
செல்கின்றது.

ஆயிரம் தோழர்கள்
அணிவகுத்து செல்கின்றனர்
புதிய உலகைப்பார்க்கும்
அவர்கள் ஏந்திய துப்பாக்கி
தவம் கிடக்கின்றது
அவர்களின் பெயர்கள்
எவருக்குமே தெரிவதில்லை
அவர்கள் வாழ்க்கை
மரணத்தில் முடிகின்றது
ஆனால் அவர்கள்
எங்குமே பின்வாங்கவில்லை
அவர்கள் பயணம் நீண்டது
அங்கே செங்கம்பளங்கள்
விரிக்கப்படுவதில்லை
செங்குருதிதான் அவர்கள்
பாதையின் ஊற்றுக்கள்
ஆபிரிக்க சகோதரனும்
ஆசிய மகனும்
தோளோடு தோள்நின்று
புறப்பட்டு விட்டார்கள்
ஏவல்நாய்களின் கூச்சல்
இங்கு இழைகின்றது

ஆனால் அவர்களின்
குரல் வளைகள் இன்று
நடுங்குகின்றன
ஏனெனில்
அவர்கள் ஜாதகம்
புரட்சி மனிதனின்
கையில் தவழ்கின்றது
புது உலகம் எம்மை
வரவேற்கின்றது

உலகின் கிழக்கே
ஒரு புதுச் சூரியன்
தன் கிரகணங்களை
விரித்துள்ளது
நைல் நதியின்
மென்மை நிறை தென்றல்
உலகெங்கும் பரவுகின்றது
ஆக்கிரமிப்பாளரின்
சவக்கிடங்குகள்
ஆழமாகத் தோண்டப்படுகின்றன
புதிய மனிதனின்
போர்க்கொடி
உயர்ந்து செல்கின்றது
அந்தச் சிவந்த
உரிமைக் கொடி
வெண்மேகங்களை
தாலாட்டுகின்றது
புரட்சி மனிதனின்
உலகம்
நம்மை வரவேற்கின்றது
விலங்குகளும்
சிறைகளும்
உடைக்கப் படுகின்றது
புது உலகம்
எம்மை நோக்கி
பரந்து விரிகின்றது
அந்தப் புதிய உலகம்
தன் கரங்களை நீட்டியுள்ளது
குருதி சொரியும் மனிதரை நோக்கி
அது வரவேற்பு கூறுகிறது.

✍ 1985.

## 7

### வையகத்தை வெற்றிகொள்ள

என் இனிய தோழிகளே
இன்னுமா தலைவார
கண்ணாடி தேடுகிறீர்
சேலைகளை சரிப்படுத்தியே
வேலைகள் வீணாகின்றன
வேண்டாம் தோழிகளே
வேண்டாம்

காதலும் கானமும்
எங்கள்
தங்கையர் பெறுவதற்காய்
எங்கள் கண் மையையும்
இதழ் பூச்சையும்
சிறிது காலம் தள்ளி வைப்போம்
எங்கள் இளம் தோள்களில்
கடமையின் சுமையினை
ஏற்றிக்கொள்வோம்

ஆடையின் மடிப்புக்கள்
அழகாக இல்லை என்பதற்காக
கண்ணீர் விட்ட நாட்களை
மறப்போம்
வெட்கம் கெட்ட
அந்த நாட்களை
மறந்தே விடுவோம்

எங்கள் தோழிகள் பலரும்
உலகில் இன்று
கண்மையையும் இதழ்ப்பூச்சையும்
மறந்து போயினர்
ஆனால்
தமது மணிக்கரத்தை
பிணைத்த விலங்கை
அறுத்தனர்

வாருங்கள் தோழிகளே
நாங்களும் வழிசெய்வோம்
மண்ணால் கோலமிட்டு
அழித்தது போதும்
எங்கள் செந்நீரில் கோலமிட்டு
வாழ்க்கை கோலத்தை
மாற்றி வரைவோம்
வாருங்கள் தோழிகளே

சரிகை சேலைக்கும்
கண்ணிறைந்த காதலர்க்கும்
காத்திருந்த காலங்கள்!
அந்த வெட்கம் கெட்ட
காலத்தின் சுவடுகளை
அழித்து விடுவோம்

புதிய வாழ்வின்
சுதந்திர கீதத்தை
இசைத்துக் களிப்போம்
வாருங்கள் தோழியரே.

✍ **1986.**

## 8

கரை தட்டும் நீலக்கடல்
என் எல்லையில்
போர் முரசு கொட்டும்
ஏழு கடலின் நீரும்
எங்கள்
கரையோரப்பனையின் மேல்
தாவ முயன்று கொள்ளும்
நாங்களோ அமைதியாய்
எங்கள் சிறு படகுகளை
கடலிலே தள்ளுவோம்
களைப்படைந்த சூரியன்
கடற்போர்வைக்குள்
தூங்குவதன் முன்
தங்கக்காசுகளை
கடலுக்கு பரிசளிப்பான்
நாங்களோ அமைதியாய்
எங்கள் சிறு படகுகளை
கடலிலே தள்ளுவோம்

கடல்மீன் தேடும்
கரிய இரவுகளில்
விண்மீன்கள் எமக்கு
பாதை
காட்டி விடும்
கடலலையின் தாலாட்டு
எங்கள் படகை சீராட்டும்
எங்கள் படகோ
கடல் மீனைத் தேடி

கடல் தொடும் வானத்தை
நோக்கி முன்னேறும்
ஆனால்
ஒரு காலம் வந்தது
வழிகாட்டி விண்மீன்கள்
எல்லாம்
கரிய மேகத்தின் கீழ்
மின்னல் கம்பிகளால்
சிறை செய்யப்பட்டன
இடிகளோ
அவற்றிற்கு பூட்டுகள் செய்தது
தாலாட்டும் கடலலையோ
எங்கள் சிறு படகை
தள்ளாட வகை செய்தது
தாண்டவம் ஆடியது
நாங்களோ போர்க்களத்து
வீரர்கள் போலானோம்
விடியல் நெருங்கியது
இறுதி மூச்சை பிடித்தபடி
வெற்றி வீரராய்
ஏழுகடல் நீர் தெறிக்கும்
எங்கள் எல்லை மண்ணிலே
காலடி வைத்தோம்
எங்களின் முன்னால்
செங்கதிர்களைப் பரப்பி
ஒரு முழுச்சூரியன்
கண்களிற்கு ஒளி தந்தான்
ஓகோ எங்களிற்குப் புரிந்தது
பகலவன் கடற்போர்வை
விலகி வரவே
இத்தனை கோரமும்

✍ 1983.

## 9

### முனைப்பு

*பேய்களால் சிதைக்கப்படும்*
*பிரதேசத்தைப் போன்று*
*சிதைக்கப் பட்டேன்*
*ஆத்மாவின் உணர்ச்சிகள் எல்லாம்*
*இரத்தம் தீண்டிய கரங்களால்*
*அசுத்தப் படுத்தப்பட்டன*

*என்னை*
*மேகத்திற்குள்ளும்*
*மண்ணிற்குள்ளும்*
*மறைக்க எண்ணிய வேளையில்*
*வெளிச்சம் போட்டுப் பார்த்தனர்*
*அவர்களின்*
*குரோதம் நிறைந்த பார்வையும்*
*வஞ்சகம் நிறைந்த சிரிப்பும்*
*என்னைச் சுட்டெரித்தன*

எனது
ஆசைகள் இலட்சியங்கள்
சிதைக்கப் பட்டன
அவர்களின் மனம்
மகிழ்ச்சி கொண்டது
அவர்களின் பேரின்பம்
என் கண்ணீரில்தான்
இருக்க முடியும்
ஆனால் என் கண்களுக்கு
நான் அடிமையில்லையே
அவர்களின் முன்
கண்ணீரைக் கொட்ட

என் வேதனை கண்டு
ரசித்தனர் அவர்கள்
என்றைக்குமாய் என் தலை
குனிந்து போனதாய்க்
கனவு கண்டனர்

ஆனால்
நான் வாழ்ந்தேன்
வாழ்நாளெல்லாம் நானாக
இருள் நிறைந்த
பயங்கரங்களின் ஊடாக
நான் வாழந்தேன்
இன்னும் வாழ்கின்றேன்

1986

## 10

கடல் கொண்ட
கபாட புரத்திற்காய்
கண்ணீர் வடிப்போர்
கண்ணீர் வடிக்கட்டும்
ஆனால் மனிதனே
அந்தச் சோம்பேறிகளின் கையில்
இந்த உலகம்
என்றும் ஒப்படைக்கப்படுவதில்லை
எங்கள் காலத்தின் சிறப்புகள்
மிகவும் உயர்ந்தவை
எங்களிற்கு உரியவை

கிளியோபட்ராவின் மூக்கைக்
கனவில் காண்பவர்கள்
கனவு காணட்டும்
அவர்களை எழுப்புவதோ
அவசியம் அற்றது
அர்த்தமும் அற்றது

ஆனால்
உலகின் சிருஷ்டிகர்த்தாக்களே
உலகை படைக்கும்
உயர்ந்த மனிதர்களே
நீங்கள் உறங்க வேண்டாம்
ஏனெனில் உங்கள் வியர்வைத் துளிகளோ
அந்த ஆபிரிக்க கல்லை விட
ஒளி நிறைந்தவை
உங்கள் மெலிந்த
எலும்புகளும்
கூனிய முதுகுகளும்
அந்தப்
பிரமிட்டுகளையும்
பேரரசுகளையும் விட
உறுதி மிக்கவை

இந்த உலகின்
சிறப்புக்கள் யாவும்
உங்களிற்கு உரியவை

எந்த சென்ற காலமும்
இதைவிடச் சிறந்ததல்ல
ஏனெனில்
எக்காலத்தின் சிறப்பும்
இக்காலத்துக்குரியவை

அன்றைய பொழுதும்
இன்றைய பொழுதும்
ஒரே சூரியன்
ஒரே சந்திரன் — ஆனால்
அன்றோ ஒரு உறக்கம்
நிகழ்வுகள் புரியாத
நிம்மதிப் பெருமூச்சு — இன்றோ
உறக்கங்கள் தோல்வி கண்ட
விழிப்பின் பரிதவிப்பு

அன்று நான்
கவிதைகள் வரையவில்லை
என்னிடம் இருந்தது
கறுப்பு மையே
இன்றோ
சிவப்பு மையால்
வரைகின்றேன்
என் உள்ளத்தை
உன் உள்ளத்தை
தோல்வியுறா தர்மத்தின்
இறுதித் தீர்ப்புகளை

நானொரு பிறவிக்
கவிஞன் அல்ல
என்னை வெறியூட்ட
இங்கு
ஓராயிரம் சம்பவங்கள்
நானோ
இருபதாம் நுற்றாண்டின்
வசந்தத் தென்றல் அல்ல

✍ 1983.

## 11

ஆதவனின்
ஒளி கண்டு மலரும்
ஆம்பலின் அழகு கண்டு
அதிலே
மொய்க்கும் வண்டின்
மோக நிலைகண்டு
கவிதை வரைவதற்கு
நான்
நீ நினைக்கும்
கவிஞன் அல்ல

காலைக் கதிரவனின்
பொன் ஒளிக்
கதிர் பட்டு — இங்கு
ஏழு வர்ணம் சிலிர்க்கின்ற
அழகுகள் என்னைக்
கவர்வதும் இல்லை
மதுவின் சுவையெனக்கு
கவிதை வெறிமூட்டி
நான்
கவிஞன் ஆகவில்லை

என்னை வெறிமூட்ட
இங்கு
ஓராயிரம் சம்பவங்கள்

அன்றைய பொழுதும்
இன்றைய பொழுதும்
ஒரே சூரியன்
ஒரே சந்திரன் — ஆனால்
அன்றோ ஒரு உறக்கம்
நிகழ்வுகள் புரியாத
நிம்மதிப் பெருமூச்சு — இன்றோ
உறக்கங்கள் தோல்வி கண்ட
விழிப்பின் பரிதவிப்பு

அன்று நான்
கவிதைகள் வரையவில்லை
என்னிடம் இருந்தது
கறுப்பு மையே
இன்றோ
சிவப்பு மையால்
வரைகின்றேன்
என் உள்ளத்தை
உன் உள்ளத்தை
தோல்வியுறா தர்மத்தின்
இறுதித் தீர்ப்புகளை

நானொரு பிறவிக்
கவிஞன் அல்ல
என்னை வெறிமூட்ட
இங்கு
ஓராயிரம் சம்பவங்கள்
நானோ
இருபதாம் நூற்றாண்டின்
வசந்தத் தென்றல் அல்ல

✍ 1983.

## 12

ஓ. . . அன்றொரு நாள்
நன்றாக நினைவுண்டு
இருண்ட வானிலே
ஒளி வீசிய
நட்சத்திரம்
இரத்தம் சிந்திய போது
மௌன விரதம்
அனுட்டித்தோர்
கடற்கரைக் கல்லிலே
உப்பு நீர் கசிகின்றது
என்பதற்காய்
இன்று
போர்க்கொடி தூக்கியுள்ளனர்
✍ 1985.

## 13

ஆயிரம் இரவுகள் கடக்கின்றன
ஒரு விடியலுக்காய்
ஆயிரம் இரவுகள் கடக்கின்றன
உதயங்களின் வருகைக்காய்
கரு மேகங்களின் விலகலுக்காய்
ஆயிரங் கண்கள் காத்துள்ளன
ஒரு விடியலுக்காய்

✍ 1989 .

## 14

*சாம்பல் மேடுகளில்*
*எதையோ தேடுகின்றான்*
*எரிந்து சாய்ந்து விட்ட*
*சாம்பல் மேடுகளில் அவன்*
*எதையோ தேடுகின்றான்*
*புரட்சித் தீப்பிளம்பு பற்றி எரிகின்ற*
*போர்க் கொடி தூக்கிய மனிதரின்*
*பூமியில்*
*நியாயத்தின் சுவாலைகள்*

உயர்ந்து செல்கின்ற
சிவந்த மண்ணிலே கருகிய சாம்பலினுள்
அவன் எதையோ தேடுகின்றான்
ஆர்ப்பரிக்கும் நியாயங்களின்
ஆத்ம கோசங்களால்

அதிர்ந்து விட்ட வானமதில்
எழப்போவது
கரு மேகங்கள் இடை குளிர் பாச்சும்
மூன்றாம் பிறையல்ல
வெண் மேகம் கீழ் இருள் அகற்றும்
சிவப்புச் சூரியனே
அந்த விடியலுக்கு முன்
அவன் எதையோ தேடுகிறான்
என்றோ சன்னம் பாய்ந்து
கிழிந்து விட்ட
அந்த சிவப்புக் கொடியை
அவன் தேடுகின்றான்
ஆனால் அவனிற்கு கூறுங்கள்
அது தேவையற்றதென்று
ஏனெனில்
புரட்சி வீரனின்
குருதியில் தோய்ந்து
வானமும் மண்ணுமே — இன்று
சிவந்து விட்டதிங்கு

✍ 1985.

## 15

ஓ என் தேசமே
உன் மணல் வெளிகளில்
நான் நடக்கின்றேன்
உனது நிர்மலமான வானத்தில்
நடசத்திரங்களை
நீ என் பார்வைக்கு பரிசளித்துள்ளாய்
உனது சிரிப்பினால் என்
சகோதரர்கள்
வாழ்கின்றனர்
நீ போர்த்துள்ள சோலையினுள்
ஒளிந்து வைத்துள்ள
வெண் முத்துகளை என் தங்கைகள்
அணிந்துள்ளனர்
வாழ்வுகளின் வாழ்வாய் நீ என்னை
அணிந்துள்ளாய் — உனக்கு
நான் கொடுப்பது
என் உயிர் மட்டுமே

✍ 1985.

## 16

### யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்

யுத்தகால
இரவொன்றின் நெருக்குதல்
எங்கள் குழந்தைகளை
வளர்ந்தவர்களாக்கிவிடும்.

ஒரு சிறிய குருவியினுடையதைப் போன்ற
அவர்களின் அழகிய காலையின்
பாதைகளின் குறுக்காய்
வீசப்படும் ஒவ்வொரு குருதிதோய்ந்த
முகமற்ற மனித உடலும்
உயிர் நிறைந்த
அவர்களின் சிரிப்பின் மீதாய்
உடைந்து விழும் மதிற்சுவர்களும்
காரணமாய்
எங்களுடைய சிறுவர்கள்
சிறுவர்களாயில்லாது போயினர்

நட்சத்திரம் நிறைந்த இரவில்
அதன் அமைதியை உடைத்து வெடித்த
ஒரு தனித்த துப்பாக்கிச் சன்னத்தின் ஓசை
எல்லாக் குழந்தைகளினதும் அர்த்தத்தை
இல்லாதொழித்தது

எஞ்சிய சிறிய பகலிலோ
ஊமங் கொட்டையில் தேர் செய்வதையும்
கிளித்தட்டு மறிப்பதையும்
அவர்கள் மறந்து போயினர்

அதன் பின்னர்
படலையை நேரத்துடன் சாத்திக் கொள்ளவும்
நாயின் வித்தியாசமான குரைப்பை இனம் காணவும்

கேள்வி கேட்காதிருக்கவும்
கேட்ட கேள்விக்கு விடை இல்லாதபோது
மௌனமாயிருக்கவும்.
மந்தைகள் போல எல்லாவற்றையும்
பழகிக் கொண்டனர்
தும்பியின் இறக்கையை பிய்த்து எறிவதும்
தடியையும் பொல்லையும் துப்பாக்கி யாக்கி
எதிரியாய் நினைத்த நண்பனைக் கொல்வதும்
எமது சிறுவரின் விளையாட்டானது.

யுத்தகால இரவுகளின் நெருக்குதலில்
எங்கள் குழந்தைகள்
"வளர்ந்தவர்கள்" ஆயினர்



✍ **1989.**

## 17

புத்திசாலித்தனமான
கடைசி மனிதனும்
இறந்துகொண்டிருக்கின்றான். . .
கேள்வி கேட்பதற்கான
எல்லா வாசலும் அறையப்பட்ட பின்னர்
இருட்டின் உறுதியாக்கலில்
உங்கள் குழந்தைகளை விட்டுச் செல்லுங்கள்
அவர்களுக்கு பின்னால் எதுவுமே இல்லை.
சேலை கட்டிக் காப்பாற்றிய
சில நாகரீகங்களைத் தவிர. . .

வினாக்களுக்குரிய விடைகள் யாவும் அச்சடிக்கப்பட்டுள்ளன.
முடிவுகளின் அடிப்படையில்
வெற்றி பெற்றவர் வரிசையில்
யாரை இங்கே நிறுத்துதல் வேண்டும்?
தேசத்தின் புத்திசாலிகள் யாவரும்
சந்திக்குச் சந்தி
தெருக்களில் காத்துள்ளனர்.

வினாக்களும் .விடைகளும் . முடிவுகளும்
யாவருக்கும் முக்கியமற்றுப் போனது.
"மனிதர் பற்றிய மனிதத்தின் அடிப்படையில்
வாழ்வதை மறந்தோம்" என்பது
இன்றைய எமது
கடைசிப் பிரகடனமாயுள்ளது.

✍ 1989.

## 18

என்னிடம்
ஓர் துண்டுப் பிரசுரத்தைப் போல
நம்பிக்கையும் முடிவும் சொல்லத்தக்க
வார்த்தைகள் இல்லை

இரவு
இரவினால் அதிகாரமிடப்பட்ட பகல்
நாளைக் காலையில்
சூரியன் உதிக்குமா என்பதில் கூட
சந்தேகம் கொண்டுள்ள என்னிடம்
கனவுகள்
தம் அர்த்தத்தை இழந்தவைதான்

இந்தச் சமூகத்தின் தொப்புள் கொடிக்கு
துப்பாக்கி நீட்டப்படும்போது
ஒரு மெல்லிய பூ நுனியில்
உட்காரக்கூடிய
வண்ணத்துப் பூச்சியின் கனவு
எனக்கு சம்பந்தமற்ற
ஒரு சம்பவிப்பு மட்டுமே

நான் மனிதனாய் வாழும் முயற்சியில்
பூக்களை மரத்துடன் விட்டுவிட விரும்புகிறேன்
எனக்கு
பகலால் உருவமைக்கப்பட்ட
அழகிய இரவு
கனவாய் உள்ளது

**1989.**

## 19

மாலை நேரங்களில்
எல்லாச் சுமைகளும் அதிகரித்துப் போய்விடும்

செத்துப்போன பகல்களின் மீது
தவிர்க்க முடியாதபடி
உரசிக் கொண்டிருந்து ஒளியும் வெப்பமும்
சிலேட்டில் கிறுக்கப்பட்ட எழுத்துக்களைப் போன்று
அடையாளமற்று அழிந்து மறையும்போது
எனது மூச்சை
எண்ணி எண்ணி வெளியே விடுவது
நேரத்தை போக்க மட்டுமல்ல

விளக்கின் அருகில்
ஈசல்கள் ஒவ்வொன்றாக விழுந்து இறந்து கொண்டிருந்தன
எதை எண்ணுவது புத்திசாலித்தனம் —
ஈசல்களையா?
இறந்து போனவர்களின் கண்களைப்போன்று
விளக்கமற்ற அர்த்தங்களை
விடுத்துக்கொண்டிருக்கும்
நட்சத்திரங்களையா?

எனக்கு உண்மைகள் தெரியவில்லை
பொய்களை கண்டு பிடிப்பதும்
இங்க இருட்டில் இலகுவான காரியமல்ல

ஆனால்
பரீட்சைக்கு புத்தகம் படிக்கும்
என் தங்கையிடம்
உனது பழக்கத்திற்கான
அர்த்தங்களைத் தேடு என்று கூறமுடியாது

மொத்தத்தில்
எல்லோரும் அவசரமாயுள்ளனர்
என்னிடம்
ஞாபகங்கள் மட்டும் எஞ்சியுள்ளன.
வெளியே
பந்தமற்று மௌனமாய் நிற்கும்
மரங்களின் நிழல்கள்
கீழே கிழிந்து போயுள்ளன

தெருவில்
அவலமும் பதற்றமுமாய்
நாய்கள் குரைக்கும் போது
பூட்டப்பட்ட கதவுகளை
மீண்டும் ஒரு முறை சரிபார்த்து விட்டு
எல்லோரும் தூங்கப் போகும் நேரத்தில்
நான்
நாளைக்குத் தோன்றுகின்ற சூரியன் பற்றி
எண்ண முடியாது.

இரவு எனக்கு முக்கியமானது
நேற்றுப் போல்,
மீண்டும் ஒரு நண்பன் தொலைந்து
போகக் கூடிய
இந்த இருட்டு
எனக்கு மிகவும் பெறுமதியானது.

✍ 1989.

## 20

### எனது பரம்பரையும் நானும்

எல்லாவற்றையும் தேடிக் கொண்டிருக்கும்
இந்த இருட்டில்
எதுவுமே இல்லை என்பது நிச்சயமாகிறது

எனக்குப் பின்னால்
எல்லாப் பரம்பரைகளும்
கடந்து கொண்டிருந்த வெளியில்
நானும் விடப்பட்டுள்ளேன்.

சொர்க்கமும் நரகமும்
இல்லாதொழிக்கப்பட்ட பரப்பில்
ஆழம் காணப்படாத சேற்றில்
எனது கால்கள் புதைகின்றன.

ஒவ்வொருத்தனும்
தனக்குரிய சவப்பெட்டியை சுமந்தபடியே
தனது ஒவ்வொருவேளை
உணவையும் உண்கிறான்

தேவதூதனுக்கும் போதிப்பவனுக்கும்
தீர்க்கதரிசிகளுக்கும் உரிய
இடமும் காலமும் போதனையும்கூட
இல்லாதொழிக்கப்பட்டு விட்டது.

கூனல் விழுந்த எம்
பொழுதுகளை
நிமிர்த்தத்தக்க
மகிழ்ச்சி எதுவும்
எவரிடமும் இல்லை.

எல்லாவற்றையும்
சகஜமாக்கக் கொள்ளும்
அசாதாரண முயற்சியில்
தூங்கிக் கொண்டும் இறந்து கொண்டும்
இருப்பவர்களிடையே

நான்
எனது நம்பிக்கைகளுடன்
தோற்றுக் கொண்டிருக்கிறேன்.

✍ **1989.**

## 21

### அவமானப்படுத்தப்பட்டவள்

உங்களுடைய வரையறைகளின்
சாரளத்துக்குப் பின்னால்
நீங்கள் என்னைத் தள்ளமுடியாது.
இதுவரை காலமும்,
நிரந்தரமாக்கப்பட்ட சகதிக்குள் கிடந்து
வெளியே எடுத்து வரப்பட்ட
ஒரு சிறிய கல்லைப்போன்று
நான்
என்னைக் கண்டெடுத்துள்ளேன்
என்னுடைய நாட்களை நீங்கள்
பறித்துக் கொள்ள முடியாது.

கண்களைப் பொத்திக்கொள்ளும்
உங்கள் விரல்களிடையே
தன்னைக் கீழிறக்கிக் கொள்ளும்
ஒரு குட்டி நட்சத்திரம் போன்று
எனது இருத்தல்
உறுதி பெற்றது.

நிராகரிக்கப்பட முடியாதவள் நான்
இனியும் என்ன
தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
நான்
பிரசன்னமாயுள்ளேன்
என்னை
அவமானங்களாலும்
அநாகரிக வார்த்தைகளாலும் போர்த்துங்கள்

ஆனால்,
உங்கள் எல்லோரினதும்
நாகரிகம் வாய்ந்த கனவுகளின் மீது
ஒரு அழுக்குக் குவியலாய்
பளிச்சிடும் உங்கள் சப்பாத்துகளை
அசுத்தம் செய்கிறேன்.

என்னுடைய நியாயங்கள்
நிராகரிக்கப்படும் வரை
உங்களின் எல்லாப் பாதைகளும்
அழுக்குப் படிந்தவையே.

✍ 1990.

## 22

இடம் :- **யாழ் பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலை**
நேரம் :- **பி. ப. 4. 30**

தனித்து
பிரயாணிகள் அற்று மறக்கப்பட்ட
ஒரு சிறிய ரயில்நிலையம் போல
ஒவ்வொருவருக்கிடையிலும்
சிரிப்புடன் கூடவே எழும்
மதிற் சுவர்களிடையே

ஒரு மாலை. . .

என்னுடைய நண்பர்களுடன் நான்
கதைத்துக் கொண்டிருக்கிறேன்.
எந்த விஷேசமுமற்ற
ஏராளமான காயங்களுக்கிடையில்
மகிழ்ச்சியாயிருக்க விரும்பும்
பொழுதுகள்

பேசுவதற்கு சொற்களற்று
மறக்கப்பட்ட பாடலுக்கு
தாளந்தட்டிய நண்பனும்,விரல்களும்
நடு மேசையில் சிதறிக்கிடந்த
தேநீர் துளிகள்
அவற்றைக் குடித்து அப்புறமாய்
மேலே கிடந்த ஒட்டறைகளில்
அகப்பட்டுக் கொண்ட இலையான்கள். . .
தோள்கள் சிவக்க எனது நண்பி
தனக்குள் சிரித்தாள்
பகிடி விட்டது யார்?
எனக்குத் தெரியாது

கண்ணாடி ஓடுகளுக்கு மேலாய்
நகர்ந்த மேகங்கள் —
அதனுடன் கூடவே நேரமும், நிமிடமும்
முகரக்கூட சுவடுகளற்று எஞ்சிநின்ற
மேசையும் கதிரையும் —
வெற்றுக் கோப்பைகளையும் விட்டு. . .

கதவின் வழியாய் புகுந்த
மேற்கின் சூரியக் கதிர்கள் விரட்ட
நாங்கள் எழுந்தோம் —
உலகை மாற்ற அல்ல,
மீண்டுமொரு இரவு நோக்கி

✍ **1989.**

*In the evenings*
*all burdens*
*weigh heavy*

*Inevitably*
*heat and light*
*graze side by side*
*on the lifeless day*

*like writings*
*on a slate*
*that rub off,*
*leave no trace*

*I count my breaths*
*not merely*
*to pass time*

*Fireflies*
*fall dead*
*by the lamp*

*What should I*
*dwell on?*
*Fireflies?*
*Or the stars*
*shining*
*with no meaning*
*like the light*
*that emits*
*from a corpse's eye*

*Truth*
*is not visible*
*in this darkness,*
*to discern untruths*
*is not an easy task,*
*but, my young sister*
*preparing for exams*
*I cannot ask*
*what motivates you,*
*why you peer in this darkness*

*All are in a hurry*
*I am left*
*with only reminiscences*

*Outside,*
*calm, silent trees*
*cast torn shadows.*

*When anguish*
*and chaos*
*rule the streets*
*with barking dogs*
*and locked doors*
*checked and re-checked*
*in readiness for night,*
*I cannot think*
*of the Sun*
*rising tomorrow.*

*The night*
*is important to me,*
*like yesterday*
*another friend*
*may be lost*
*in this dark*

*The night*
*it is valuable*
*to me.*

# In a night of war

*In a night*
*of war*
*pressure-filled*
*the young ones*
*grow up.*

*Across the paths*
*of their mornings*
*like delicate birds*
*are thrown*
*blood-soaked*
*faceless bodies,*
*walls crumble*
*on their spirited laughter*
*our young*
*are young*
*no more.*

*A burst of gunfire*
*shatters the stillness*
*of a star-filled sky*
*destroying the meaning*
*of children's stories.*

*In the little*
*that is left*
*of day they forget*

*to make chariots*
*of palmyrah nuts*
*and play kilithatu*

*Then they learn*
*to shut the cadjan*
*fence on time*
*and differentiate*
*between the barkings*
*of a dog,*
*not to question*
*and be silent*
*when questions*
*possess no answers,*
*like sheep*
*they have learned*
*all of this*

*To tear off*
*the wings of insects*
*make guns*
*from sticks and logs*
*kill friends*
*thinking them enemies,*
*these are the games*
*our children play.*

*In a night*
*full of pressure*
*during war,*
*our young have grown up.*



"

.........................................

கவிதை வெறிமுட்டி
நான்
கவிஞன் ஆகவில்லை

.........................................

என்னை வெறியூட்ட
இங்கு
ஓராயிரம் சம்பவங்கள்

.........................................

அன்று நான்
கவிதைகள் வரையவில்லை
என்னிடம் இருந்தது
கறுப்பு மையே
இன்றோ
சிவப்பு மையால்
வரைகின்றேன்
என் உள்ளத்தை
உன் உள்ளத்தை
தோல்வியுறா தர்மத்தின்
இறுதித் தீர்ப்புகளை

நானொரு பிறவிக்
கவிஞன் அல்ல
என்னை வெறியூட்ட
இங்கு
ஓராயிரம் சம்பவங்கள்
நானோ
இருபதாம் நூற்றாண்டின்
வசந்தத் தென்றல் அல்ல

✍ **சிவரமணி**